## அரசு நிர்வாகத்தில் ஆர்.எஸ்.எஸ்.!

மோடி அரசு பதவியேற்றதில் இருந்து அரசின் எல்லா மட்டங்களிலும் இந்துத்துவத்தைத் தீவிரமாகப் பரப்புவதில் ஆர்வம் காட்டுகிறது. நிர்வாகத்தின் முக்கியமான பொறுப்புகளில் இந்துத்துவாவாதிகளை நியமிப்பது முதல் கிரிமினல் சட்டங்களின் பெயர்களையே சமஸ்கிருதமாக்கப்பட்ட இந்தியில் சூட்டுவது வரை, பா.ஜ.க.வின் காவிக்கரங்கள் நீள்கின்றன. அதன் சமீபத்திய வெளிப்பாடுதான் ஆர்.எஸ்.எஸ் குறித்த ஒன்றிய அரசின் அரசாணை.

‘அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் பணியாற்றக்கூடாது’ என்று 1966-இல் விதிக்கப்பட்ட தடையை நீக்கி, ‘ஒன்றிய அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் சேரவும் பணியாற்றவும் தடையில்லை’ என்ற அரசாணையைப் பிறப்பித்திருக்கிறது, பிரதமர் மோடியின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் ஒன்றிய பணியாளர் மற்றும் பயிற்சித் துறை.

மகாத்மா காந்தியடிகளின் படுகொலையையொட்டி தடை செய்யப்பட்ட அமைப்பு ஆர்.எஸ்.எஸ். பொதுவெளிகளில் ஆயுதங்களுடன் ஊர்வலம் செல்லும் ஒரே அமைப்பு ஆர்.எஸ்.எஸ்.தான். அதேபோல் மதவாத வெறியூட்டி கலவரங்களை நடத்துவதில், ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு முக்கியப் பங்கு உண்டு என்பதைப் பலரும் ஆதாரங்களுடன் அம்பலமாக்கியுள்ளனர். இப்படிப்பட்ட ஆபத்தான பின்னணி கொண்ட ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தில் ஒன்றிய அரசுப் பணியாளர்கள் சேரலாம் என்றால், அவர்கள் எப்படி பாரபட்சமற்ற மக்கள் பணியாற்றுவார்கள் என்ற கேள்வி பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

## ::ப்ளாஷ்பேக்



### மறைந்தவருக்கு மரியாதை!



க.வெற்றிவேல்

1989-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து மகிழ்ந்தார், என்னுடைய மூத்த சகோதரர் க.கந்தவேல். எனது தந்தை தீவிரமான கழக உணர்வாளர் என்பதால், அவர் வழியில் கழகத்துக்காக உழைத்தவர் என் அண்ணன். அவர் சமீபத்தில் மறைந்தபோது கழகத்தினர் வருகைதந்து, சிறந்தமுறையில் மரியாதை செய்தனர். அண்ணன் நினைவாக என்னிடம் உள்ள அரிய புகைப்படம் இது.

– க.வெற்றிவேல், மயிலாப்பூர், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### முன்னுதாரணம் இல்லாத எழுச்சி!


1986-ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில் கழகம் பெரும் வெற்றிபெற்றது. “அடுத்தடுத்து நடந்த சட்டமன்றப் பொதுத்தேர்தல்களில் மூன்றில் கடும் தோல்வி கண்ட தி.மு.க. இந்தத் தேர்தலில் வியத்தகு வெற்றி பெற்றதன் மூலம், தான் ஒரு வீறுகொண்ட அரசியல் சக்தியே என்பதை நிலைநாட்டி இருக்கிறது” என பத்திரிகைகள் எழுதின. ‘இது கலைஞருக்குக் கிடைத்துள்ள தனிப்பட்ட வெற்றி’ என ‘எகனாமிக் டைம்ஸ்’ எழுதியது. ‘இந்திய அரசியலில் இத்தகைய எழுச்சியைக் காண்பது அரிதாகும்’ எனவும் அது குறிப்பிட்டிருந்தது.

# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் **21**

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்!
அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு
குறித்த வரலாற்றைப் பேசும்
எல்லோருக்கும் எல்லாம்!

### இந்தியாவில் சாதி அமைப்பு




## இடஒதுக்கீடு யாருடைய ஆதிக்கத்துக்கு எதிரானது?

அரசு நிர்வாகம், வேலைவாய்ப்பு, கல்வி என எங்கெங்கு காணினும் பிராமணர்களின் ஆதிக்கம் நீக்கமற நிரம்பி இருந்ததால், அவற்றை மாற்றக்கோரி இயங்கியவர்களிடம் இயல்பாகவே பிராமண ஆதிக்க எதிர்ப்பு இருந்தது. அந்த வகையில், உரிமைப் போராட்டமான இடஒதுக்கீட்டையும் பிராமணரல்லாதார் இயக்கத்தையும் தனித்தனியாகப் பிரிக்கமுடியாது. இரண்டும் ஒட்டிப்பிறந்த குழந்தைகள். 200 ஆண்டுகால பல்முனைப் போராட்டத்தின் விளைவாக உருவான இடஒதுக்கீடு எனும் சட்டவடிவத்தை பிராமணர், பிராமணரல்லாதார் என்ற இரு எதிரெதிர் துருவங்களுக்கு இடையேயான முரண்பாடு என்ற ஒரே ஒரு பரிமாணத்துக்குள் அடக்க முடியுமா?

இடஒதுக்கீட்டில் பிராமணர் ‘எதிர்’ பிராமணரல்லாதார் என்ற முரண்பாடு மிகமுக்கியப் பங்கு வகித்தாலும், இடஒதுக்கீட்டை பிராமணர், பிராமணரல்லாதார் என்ற இரு பிரிவிற்கிடையில் முடக்க முடியாது, என்பதை இந்தியாவின் வட மாநிலங்களில் இடஒதுக்கீட்டுக்காக நடந்த போராட்டங்களும் சமூக இயக்கங்களும் கற்றுத் தருகின்றன.

**சாதிகள் உருவான பின்னர், சமூக அந்தஸ்தும், உரிமைகளும் இல்லாத பல்வேறு சாதிகள் தங்களை ஷத்தியர்கள் என்றும் வைசியர் என்றும் அழைத்துக் கொண்டனர்.**

ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குட்பட்ட பிரிட்டிஷ் இந்தியாவில் குறிப்பாக, அன்றைய பம்பாய், மெட்ராஸ் மாகாணம் ஆகிய இரண்டு பகுதிகளும் இடஒதுக்கீட்டுப் போராட்டத்தில் மிக முக்கியப் பங்கு வகித்தன. இவற்றுடன் வங்காளம், ஐக்கிய மாகாணம் ஆகியற்றை இணைத்தால், இன்றைய இந்தியாவின் பெரும்பகுதி இந்த 4 மாகாணங்களில் அடங்கிவிடும். இன்றைய உத்தரபிரதேசம், உத்தராகண்ட் மாநிலங்கள் அடங்கியது, ஐக்கிய மாகாணம். பம்பாய், மெட்ராஸ் மாகாணங்களில் இடஒதுக்கீடு கோரி எழுந்த இயக்கங்களை வங்காளம், ஐக்கிய மாகாணங்களோடு ஒப்பிட்டால், பம்பாய், மெட்ராஸ் மாகாணங்கள் முன்வரிசையில் நிற்கின்றன.

வரலாற்று ரீதியாக, தென்னிந்தியாவில் பிராமணர், சூத்திரர் என்ற இரண்டு வர்ணங்கள் மட்டுமே இருந்தன. வர்ணங்கள் உடைந்து சாதிகளாக மாறிய பின்னரும், சூத்திர வர்ணத்திலிருந்து உருவாகிய சாதிகள் சமூகத்தில் மிகத் தாழ்ந்த நிலையில் இருந்தன. மறுபுறம் அதிக சேதம் ஏதுமில்லாமல், பிராமணர் வர்ணம் அப்படியே இருந்தது. எனவே பிராமணர், எதிர் பிராமணல்லாதார் என்ற கோட்பாட்டு முரண்பாடும், அதனை ஒட்டிய சமூக இயக்கங்களும் தோன்றின.

மாறாக வட இந்தியாவில் பிராமணர், ஷத்திரியர், வைசியர், சூத்திரன் என மனுஸ்ருமிதியில் கூறப்பட்டுள்ள நான்கு வர்ணங்களும் கடந்த நூற்றாண்டு வரை உயிர்பிழைத்து வந்துள்ளன. வர்ணங்கள் உடைந்து தனித்தனி சாதிகளாக மாறிய பின்னரும், அந்தச் சாதிகளில் வர்ணத்தன்மை தொக்கி நின்றது. வேறு சொற்களில் கூறினால், சமூகத்தின் உயர் அடுக்கில் பிராமணர் மட்டுமில்லை. பனியா, காயஸ்தா, ரஜபுத்திரர், பைத்யா போன்ற பிராமணரல்லாத சாதிகளும் சமூகத்தின் உயர் அடுக்கில் இருக்கின்றனர். அவர்கள் தங்களின் அதிகாரத்தைத் தக்கவைக்க பலமுயற்சிகளைக் கையாண்டனர். உயர் அடுக்கில் இருந்த சாதிகளுக்கிடையே அதிகாரப் போட்டி இருந்தாலும், அவர்கள் உரிமைகள் இல்லாதிருக்கும் தாழ்த்தப்பட்ட சாதிகளை மேலெழும்ப அனுமதிக்கவில்லை.

கீழிருந்த சாதிகளுக்கும் யாரை முதன்மை எதிரியாகக் கருதுவது என்ற சிக்கல் இருந்தது. ஆகையால்தான், வர்ணங்கள் உடைந்து, சாதிகள் உருவான பின்னர், சமூக அந்தஸ்தும், உரிமைகளும் இல்லாத பல்வேறு சாதிகள் தங்களை ஷத்தியர்கள் என்றும் வைசியர் என்றும் அழைத்துக் கொண்டனர். அவர்களின் வாழ்நிலையோ சூத்திர சாதிகளை ஒத்திருந்தது. வங்காளத்தின் இராஜ்பன்ஷிக்கள் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அடுத்து, பெருமளவில் இருந்த முஸ்லிம்கள். இந்தப் பின்னணியோடு ஐக்கிய மாகாணத்துக்குள் நுழைந்து, ஆதிக்க எதிர்ப்பு வரலாற்றைப் பயில்வோம்.

...குரல் ஒலிக்கும்

# மாநாடு

ர.பிரகாசு **21**

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...



## உதயமானது சூரியன்!

சூரியன் உதிக்காவிட்டால் என்ன ஆகும்? பூமியின் இருள் நிரந்தரமாகும். வெப்பநிலை மைனஸ் டிகிரிக்குச் சென்று, முதலில் தாவரங்கள் அழியும். ஒருவாரத்துக்குள்ளாக பூமியின் சுற்றுவட்டப்பாதை சீர்குலைந்து, சமநிலையை இழக்கும். காலநிலை மோசமடைந்து, உயிரினங்கள் மெல்லச் சாகும். வேறு கிரகத்துக்கு நகராவிட்டால், மனித இனமும் அழிந்துபோகும். உலக உயிர்களும், புவியின் உயிரும் உருக்குலையாமல் இருக்க, சூரியன் உதித்தே தீர வேண்டும். அத்தகைய உலகின் உயிர்மூச்சான உதயசூரியன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னமானது, 1958-இல். ஆனால், அதற்கும் முன்பே உதயசூரியனைக் கையிலெடுத்துவிட்டார் முத்தமிழறிஞர் கலைஞர்.

தி.மு.கழகம் தொடங்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குள்ளாகவே. தீவிர அரசியலுக்குள் கலைஞர் இழுத்து வரப்பட்டிருந்தாலும், கலை உலகத் தொடர்பை விட்டுவிடாமல் பேணி வந்தார். கலைத்துறையில் கலைஞர் கொண்டிருந்த ஈர்ப்புக்கு ஆகச்சிறந்த உதாரணம் ‘உதயசூரியன்’ நாடகம். இந்த நாடகத்தை எழுத கலைஞர் எடுத்துக்கொண்ட காலம் ஒருவாரம் மட்டுமே.

**“உதயசூரியன் நாடகம் கழகப் பிரச்சாரத்தில் கலையின் வாயிலாக ஒரு திருப்பத்தை உருவாக்கி உள்ளது!”**

பேரறிஞர் அண்ணாவுக்கும் இந்த நாடகம் மிகவும் பிடித்துப்போக, தேர்தல் பரப்புரைக்காக தமிழ்நாடு முழுவதும் அரங்கேற்ற முடிவானது. 1958-ஆம் ஆண்டு பிப்ரவரியில் நடைபெற்ற வேலூர்- சேலம் மாநாட்டில்தான் நாடகத்தை முதன்முதலில் அரங்கேற்ற திட்டமிடப்பட்டது. ஆனால், அந்த மாநாட்டின் தலைவராக கலைஞர் நியமிக்கப்பட்டதால், நாடக அரங்கேற்றம் அடுத்த மாநாட்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அடுத்த ஒருவாரத்தில், பிப்ரவரி 22, 23 ஆகிய தேதிகளில் இராமநாதபுரம் மாவட்ட மாநாடு பேராசிரியர் அன்பழகன் தலைமையில், தேவகோட்டையில் நடைபெற்றது. இலட்சிய நடிகர் இராசேந்திரன் மாநாட்டைத் திறந்து வைத்தார். ‘உதயசூரியன்’ நாடகமும் அரங்கேற்றம் செய்யப்பட்டது. கலைஞரே நடித்தார். தேர்தல் களத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகப் படை வீரர்களை முறுக்கேற்றியது அந்த நாடகம்.

இந்த மாநாட்டைத் தொடர்ந்து கழகத்துக்கு நிதி திரட்டும் சிறந்த கருவியாக ‘உதயசூரியன்’ நாடகம் பயன்பட்டது. அடுத்த 10 நாட்களில் 01.03.1958-இல் உதயசூரியன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகாரப்பூர்வமான சின்னமாக தேர்தல் ஆணையத்தால் ஒதுக்கப்பட்டது.

உதயசூரியன் நாடகம் கொடுத்த வெற்றியை விட, உதயசூரியன் சின்னம் கலைஞரை அதிக மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியது. காரணம்,

“உயிர்களுக்கெல்லாம் உற்றத் தோழன்
உதயசூரியன்!
அரும்பை மலரச் செய்பவனும்
உதயசூரியன்!
அனைத்துக்கும் ஒளி ஊட்டுபவன்
உதயசூரியன்!
அகிலம் ஆளும் வலிமை பெற்றோன்
உதயசூரியன்!
பொங்கிவிடும் வளத்தைத் தந்திடுபவனும்
உதயசூரியன்!”

என பேரறிஞர் அண்ணா உளமார விரும்பிய சின்னம். அதனால்தான் கலைஞரின் உதயசூரியன் நாடகமும் அவரைப் பெரிதும் ஈர்த்தது. “உதயசூரியன் நாடகம் கழகப் பிரச்சாரத்தில் கலையின் வாயிலாக ஒரு திருப்பத்தை உருவாக்கி உள்ளது” என கலைஞரை மனதாரப் பாராட்டினார் அண்ணா. மாநாடு நடைபெற்ற அதே தேவகோட்டையில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் அதிகாரப்பூர்வச் சின்னமான உதயசூரியனில் முதல்முறையாகக் களம் கண்டது. அன்றைய ஆளும் காங்கிரஸின் பலத்தைக் குறைக்க பேராயுதமாகப் பயன்பட்டது ‘உதயசூரியன்’ நாடகம்.


‘உதயசூரியன்’ கலைஞரின் ஆழ்மனதிலும், கழகத்தின் வரலாற்றிலும் ஆழமாய் ஊறிப்போனது தேவகோட்டை மாநாடு. தேவகோட்டையில் உதயமான சூரியன் இன்னும் உதித்துக்கொண்டே இருக்கிறது. சூரியன் ஓய்ந்துவிட்டால் உலகம் ஏது?

...கூட்டம் திரளும்

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**548**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131